# கல்கி

நிறுவனர்:

25-8-68

விலை 20 காசு



# விகடனின் விதூஷகம்!

இராஜாஜி 'ஸ்வராஜ்யா' இதழில் எழுதியதைத் துணைக்கு அழைத்துக்கொண்டு 'சிலை வைப்பு'ப் பிரச்சனை பற்றி 'விகடன்' இதழ் இப்போது 'திரை'யைக் கிழித்துக்கொண்டு வெளிவந்து உபதேசம் செய்யத் தலைப்பட்டிருக்கிறது.

விகடனுக்கென தனிக் கருத்து இருந்திருந்தால் அதனை அது சார்புடைய கட்சிக்காரர்கள் நடத்திய ஆகஸ்ட் 1-ந் தேதி ஊர்வல அலங்கோலத்துக்கு உடன்வந்த இதழினில் எழுதியிருக்கலாம்.

சிலையினை ஒரு பிரச்சனையாக்கியது காங்கிரசார் ஆகஸ்ட் 1-ந் தேதி நடத்திய ஊர்வலத்தின் மூலம்தானே?

பின்பு 4-ந் தேதி காமராசர் காவலுடன் அண்ணா சிலைமீது காட்டப்பட்ட கண்ணியம் 1-ந் தேதியன்று அறவே அற்றுப் போயிருந்ததற்குக் காரணம் என்னவோ?

கண்ணியம் என்பது பிறவிக் குணமாக பழக்கத்தில் ஒரு பண்பாக இருந்திருந்தால், கடமை கண்ணியம் கட்டுப்பாட்டினை தமிழக அரசியலில் தனது கட்சியின் மூலம் தாரக மந்திரமாக்கிக் கொடுத்த அந்த சிலையினருகில் காங்கிரசார் சில அவல நடவடிக்கைகளைச் செய்திருப்பார்களா?

அல்லது ஒவ்வொரு முறை ஊர்வலம் வரும்போதும் தங்கள் தலைவர் காமராசர் ஓடிவந்து காவலுக்கு நின்றால்தான் தங்களால் அமைதியாக நடந்து செல்லமுடியும் என்று அக்கட்சியினர் கருதுகிறார்களா?

—'ஆனந்த விகடன்' இதழ் இத்தனைச் சிந்தனைகளையும்தந்துவிட்டுப்பின்னர் 'இவையெல்லாம் எதற்கு? சிலையைத்தான் அகற்றி விடுங்களேன்!'' என்று சிபாரிசு செய்திருந்தாலாவது ஒரு பக்கம் நியாயம் என ஒத்துக் கொள்ளலாம்.

ஆனால் மேற்கண்ட எதனையும் கருத்தில் பதிய வைத்ததாகக்கூட காட்டிக் கொள்ளாமல்—

'மூட்டைப் பூச்சி' என்றதும் தீப்பந்தத்தினைக் கொண்டுவந்து, கொளுத்தினால்தான் வீடு தப்பிக்கும்; நாமும் நன்றாகத் தூங்கலாம் என்று கூறிய 'விவேகி'யைப் போல—

சிலை பற்றிய பிரச்சனை என்றதும் 'பேசாமல்' வேறு ஒதுக்குப் புறமாக அப்புறப்படுத்தி விடுவோமே என்ற உபதேசத்தினை சுதந்திரதினச் சிறப்பிதழில் விகடனார் வழங்கியிருப்பது தலையங்கமாவது ஒருவகை 'ஹாஸ்ய'மாக இருக்கட்டுமே என்ற நைப்பாசையின் விளைவாக இருக்கலாம்.

விகடன் இதழ் முதலில் ஒன்றினைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆபத்து என்ற நிலையினை அவ்வப்போது உருவாக்கி வருவது அண்ணா அவர்களின் சிலைக்கு மட்டும்தான்.

கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோதும் சரி—ஆளும் கட்சியாக இருக்கும்போதும் சரி அதே மவுண்ட் சாலையில் அடுத்து நிற்கும் காமராசர் சிலைக்குஅணுவளவு ஆபத்துக்கூட ஏற்படவில்லை.

எனவே ஆகஸ்ட் நிகழ்ச்சிகளைக் காட்டி சிலைகளை அப்புறப்படுத்துவோம் என விகடன் புன்மையில் எழுதியிருப்பது ஒன்று வேடிக்கையிலேயே ஊறிப்போன சிந்தனையின் விளைவாக இருக்கவேண்டும்.

—அல்லது இதனை ஒரு சமயமாகக் கொண்டு காமராசர் சிலைக்கும் 'வேட்டு' வைப்போம் என்ற ஏதாவது 'புதிய சூழ்ச்சி'யாகவும் இருக்கக்கூடும்.

காங்கிரஸ் கட்சியினரால் அண்ணா சிலைக்கு அவ்வப்போது ஏற்பட்டு வரும் ஊறுகளையும்—

—காமராசர் சிலைக்கும் அதுபோல காங்கிரஸ் அல்லாத கட்சியினரால் எழலாமே என விகடன் யூகிப்பது ஒரு துண்டு வெயிலில் காய்வதற்கு ஒரு மணி நேரம்; நான்கு துண்டுகள் காய்வதற்கு நான்கு மணி நேரம் என கணக்குப் போட்ட புத்திசாலித்தனத்தைத்தான் நினைவூட்டுவதாக இருக்கிறது.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக காமராசர் சிலைமீது கழகத்தவரால் ஒரு சிறு அரசியல் துரும்பும் விழாமல் இருக்க அந்த ஒரு நிலை இனி மட்டும் ஏற்பட்டுவிடுமே என இட்டுக் கட்டுவது பேதமை தவிர வேறில்லை—

—அல்லது இப்போது அண்ணா சிலைக்கு, ஏற்பட்டுக் கொண்டுவரும் ஊறுகளை மறைத்துக் காட்டுவதற்கு இப்படி ஒரு காட்சி மாற்றத்தைக் காட்டும் ராஜதந்திரமா என்றும் புரியவில்லை.

ஒருநாள் கூத்துக்காக மீசையை எடுத்தவன் கதையாக ஆகஸ்ட் 1-ந் தேதி காங்கிரசார் காட்டிய வன்முறைக்காக—

(4-ம் பக்கம் பார்க்க)

எஸ். ஆர்.

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 25–8–68 இதழ் 5


## [illegible]ந்த [illegible]ய்மொழிக்கு இழிவென்று

கடந்த கிழமை, கழக நாடாளு மன்ற உறுப்பினர் இரா. செழியன் அவர்களால் நாடாளு மன்றத்தில் கொண்டு வரப்பட்ட ஒரு தனி நபர் மசோதா, காங்கிரஸ் பெரும்பான்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டு விட்டிருக்கிறது.

பத்து இலட்சம் மக்களுக்குப் பிரதிநிதியாகச் செல்லும் ஒருவர், நாடாளு மன்றத்தில் மக்களது கருத்துக்களை, தேவைகளை, விளக்கங்களைத் தம் தாய் மொழியிலேயே எடுத்துக் காட்டும் உரிமையை சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்துப் பொதிந்தது தான் அந்த மசோதா.

இப்போதுள்ள முறைப்படி, அங்கு உறுப்பினராக வருவோர். இந்தி அல்லது ஆங்கிலத்தில் பேசும் உரிமையை சட்டம் அளிக்கிறது. இந்த இருமொழிகளும் தெரியாதவர்கள் அவைத் தலைவரின் முன் அனுமதி பெற்றுத் தம் தாய்மொழியில் பேசலாம்.

ஒரு வட்டார மக்களின் பிரதிநிதியாகச் சென்றுள்ள ஒருவர், அவ்வட்டார மொழியில் தம் கருத்தை எடுத்துச் சொல்வதற்கு இப்போது தலைவரின் அனுமதி பெற்றாக வேண்டும். செழியன் அவர்களது மசோதா, ஏற்றுச் செயல்படுத்தப்பட்டால், இந்த அனுமதி பெறத் தேவையில்லை. பேசுவதற்கு உரிமை தானாக வந்து விடும்.

தம் தாய்மொழியில் ஒன்றை எடுத்துச் சொல்வதற்கு அனுமதி பெறுவது என்பதற்கும், உரிமை பெறுதல் என்பதற்கும் எத்தனை வேறுபாடு இருக்கிறது என்பதனை விளக்கத் தேவையில்லை.

படிப்படியாக ஆங்கிலம் அகற்றப்பட வேண்டும் என்ற கருத்தோடு செயல்பட்டு வரும் மத்திய அரசு, காலப்போக்கில் நாடாளுமன்றத்திலும் இந்திஒன்றுக்கே முழு முக்கியத்துவம் நல்கும் என்பதைத்தான் இந்த மசோதா தள்ளுபடி செய்யப்பட்டதிலிருந்து தெரிகிறது.

அதுமட்டுமல்லாமல், வட்டார மொழிகள்பற்றி மத்திய அரசு, எந்த அளவுக்குக் கருத்துக்கொண்டிருக்கிறது? எவ்வளவு மதிப்புவைத்திருக்கிறது என்பதும் இதிலிருந்து புலனாகிறது.

மொழி வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கட்சிக் கமிட்டி வைத்துச் செயல்படும் காங்கிரஸ் மத்திய அரசு, அது தன் அவையில் வட்டாரமொழி ஒலிக்கப்படுவதனைப் பொறுத்துக்கொள்ள முடியாததாக இருக்கிறது என்பதைத் தெளிவாக்குவதுதான் துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய், "கொள்கை ரீதியாக நான் இதனை எதிர்க்கிறேன்" என்று கூறி இருப்பதாகும்.

கொள்கை ரீதியாக என்றால், மத்திய அரசின் இந்திக் கொள்கை என்றுதானே பொருள்? இந்திக்காரர்களுக்கு மட்டுமே, இந்தியத் துணைக்கண்டத்து அத்துணைப்பேரும் கைகட்டிச் சேவகம் புரிவோராக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே கொள்கைகளை வகுத்துச் செயல்பட்டு வருவோரிடம், வட்டார மொழிகளுக்கு ஏற்றம் தேடிக்கொள்ளவேண்டும் என்பது எப்படி இயலும்?

உயிரினும் மேலான மொழி விவகாரம் தொடர்புடைய இம்மசோதாவில் உள்துறை இலாகா அமைச்சர் அல்லது அவரது துணை அமைச்சர்களேகூட அக்கறை காட்டிக் கொள்ளாதது மட்டுமல்லாமல்— அலட்சியமாகவும் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் செய்தி படிக்கிறபோது, இந்தியாவின்மீது மட்டுமல்ல—இந்தி வெறியர்கள் மீதேகூட ஒருவகை ஆத்திரம் பற்றத்தான் செய்கிறது!

எதற்கெடுத்தாலும் ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு என்று கூச்சல் கிளப்பும் மத்திய அரசு, தானே முன் வந்து இந்தியாவின் ஒற்றுமை உணர்வுக்கு உலை வைக்கப்பார்க்கும் போக்கை, பைத்தியகாரத்தனமானது என்பதா? அறியாமை என்பதா தெரியவில்லை.

எந்தக் காரணத்தைக் காட்டி, செழியன் அவர்களது மசோதா தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும், இந்தியத் துணைக்கண்டத்து இந்தி நீங்கலான அனைத்து மொழிகளும் பழிவாங்கப்பட்டிருக்கின்றன— பழித்துவிடப்படிருக்கின்றன என்பதுதான் பொருளாக இருக்க முடியும்.

எதற்கும் மனம் இருந்தால்தான் மார்க்கம் இருக்குமே ஒழிய, மனமே இல்லாதவர்களிடம் மார்க்கம் தேடிப் பயன் ஏதும் விளையப் போவதில்லை. எனவே, தத்தம் மொழிக்கு, அந்தந்த மொழிக்காரர்கள்தான் பாதுகாப்புத் தேடிக்கொள்ள வேண்டும். அந்த நாள் வரும்போது, இந்தியும், அதன் வெறித்தனமும் கிளப்பப் போகிற அவலம், பரிதாபகரமானதாகத்தான் இருக்கப் போகிறது என்பது மட்டும் நிச்சயம்.

## பரிசுச் சீட்டு

தமிழக அரசின் பரிசுச் சீட்டு விற்பனை, கடந்த ஒருவார காலமாக தமிழகமெங்கனும் விற்பனையாகிக் கொண்டு வருகிறது. குலுக்கல் பரிசு முறை என்பது ஒருவகையில் சூதாட்ட மனப்பான்மையை வளர்க்கும் என்று சிலர் வாதாடினாலும்கூட தமிழக அரசின் இந்த முறையின் மூலம், கிடைக்கின்ற வருவாய்கள் அனைத்தும், குடிநீர், சுகாதரம், பள்ளி அபிவிருத்தி போன்ற ஆக்கப்பணிகளுக்கே பயன்படுத்தப்பட விருப்பதால், ஒரு சிறு குறையைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லை. ஒரு ரூபாய்க்கு ஒரு சீட்டுப் பெறுவதின் மூலம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தமிழகத்தில் ஒரு 'குரூப்'புக்கு ஒரு லட்சாதிபதியும் ஐந்து பேருக்கு அரை லட்சமும், 50 பேர் 1000 ரூபாயும், 500 பேர் 100 ரூபாயும் பரிசு பெறும் வாய்ப்பையும் பெறுகிறார்கள். இதுபோல் பல 'குரூப்' டிக்கட்டுகள் விற்பனையாகிற போது பல லட்சாதிபதிகள் உருவாகிறார்கள். ஓர் ஆண்டில் 100க்கும் அதிகமான பேர் லட்சாதிபதியாகிறார்கள் என்று கணக்குப் போட்டுப்பார்க்கும்போது பெருமையாகவே இருக்கிறது. எனவே தமிழக அரசின் பரிசுச் சீட்டு முறை, பட்டி தொட்டி எங்கும் பரவும் முயற்சியில் விற்பனையாளர்கள் மட்டுமல்லாமல் துணை விற்பனையாளர்களும்கூட முயற்சி மேற்கொண்டால் அது தமிழகத்துக்கு இருவழிகளில் பயன்படும்—நாடு வளம்பெறும் என்பது தெளிவு. தமிழக மக்கள் அனைவரது கரங்களிலும், ஒவ்வொரு 'சீடடு' இருந்தாலேபோதும், என்றோ ஓர் நாள் அவர்களும் ஒரு லட்சாசிபதியாகி விடக் கூடுமில்லையா!

2-ம் பக்கத் தொடர்ச்சி

பாராட்ட, நன்றி காட்ட, காலங்களுக்கு நிலைத்து நிற்கும் ஒரு முறையினை அப்புறப்படுத்தும்படி சொல்லும் ஒரு துணிவு விகடனாருக்கு எப்படி வந்ததோ விளங்கவில்லை.

இத்தருணத்தில் விகடனோ அல்லது அந்த இதழ்த் தலையங்கத்துக்கு ஒப்புதல் அளிப்பவர்களோ இராஜாஜியைக் காட்டி "அவர் கூறவில்லையா அப்படி? அதனைத்தான் மேற்கோள் காட்டி இத்தலையங்கமும் எழுதப்பட்டிருக்கிறது என வாதாடலாம்,

இராஜாஜி அவர்கள் கூறியிருப்பது—அவரே கூறியுள்ளபடி—ஒரு தனிக் கருத்து. அதனையொட்டி நாமாகச் சிறிது சேர்த்துக்கொண்டு சொல்வதானால் அது ஒரு அரசியல் கருத்தல்ல—தனிப்பட்ட கொள்கை.

பிறருக்கு மட்டுமல்ல; தனக்கும் சிலை வைப்பது என்ற பழக்கமே அவருக்குப் பிடிக்காத ஒன்று.

ஆனால் சிலை வைப்பு என்ற வழக்கம் ஆண்டுகள் பலவாக உலகெங்கும் இருந்துவரும் ஒருமுறை.

அந்த முறையைப் பிடிக்காதவர்கள்—விரும்பாதவர்கள் இருக்கலாம்.

ஆனால் அதனை இழிவுபடுத்துபவர்கள் இருப்பது சரியல்ல.

அப்படி இழிவு நேரிடுகிறதே என்பதற்காக அந்த முறையையே மாற்றிக்கொள்ள வேண்டுமென்று யோசனை கூறுவதும் பொறுத்தமல்ல.

சலசலப்பு நேரும்போது சகதிக் கருகில் சென்றால் மேலே தெறிக்கும் என்பதற்காக, கண்ட இடங்களிலும் இருக்கும் சகதிகளை அப்படியே விட்டுவைத்து விடுவோமே என நினைப்பது ஒன்று சோம்பேறித்தனம் அல்லது விவேகமற்ற தன்மை.

தமிழக அரசியலில் சின்னஞ் சிறு எதிர்க் கட்சிகள் இருந்தபோதெல்லாம் ஏற்படாத இந்தக் களங்கம் — அநாகரிகச் செயல்—முதன்மைக் கட்சியாக இருந்த—இப்போது எதிர்க் கட்சியாக மாறியிருக்கும் காங்கிரசுக் கட்சியால் நேரிடுகிறதே என கவலை தெரிவித்து—கண்டனங்கள் எழுப்பி — அறிவுரை தரவேண்டிய விகடன்—

மூட்டைப்பூச்சிக்குப் பயந்துகொண்டு வீட்டைக் கொளுத்தியவன் கதையாய்—

சிலைகளையே அப்புறப்படுத்தி விடலாமே என சிபாரிசு செய்திருக்கிறது. துணைக்கு காமராசர் சிலையையும் அழைத்துக்கொண்டு.

காங்கிரசாருக்கு முதலில் உபதேசம்புரிந்துபார்த்து அதிலும் முடியாவிட்டால் விகடன் இந்த யோசனை வழங்கியிருக்குமானால் கூட ஓரளவு பாராட்டலாம்.

ஆனால் எடுத்த எடுப்பிலேயே சிலைகளை அப்புறப்படுத்தி விடலாமே என காங்கிரசாரின் நற்பண்பில்–நல்லொழுக்கத்தில்–அரசியல் கண்ணியத்தில் - கட்சிக் கட்டுப்பாட்டில் நம்பிக்கைகொள்ளாத விகடன் இதழுக்கு ஒன்றே ஒன்றினை மீண்டும் நினைவுபடுத்துவோம்.

"சந்தடி சாக்கில் காமராசர் சிலைக்கும் 'வேட்டு' வைப்போம் என்ற உள்நோக்கம் இருந்தால் அதுபற்றி நமக்குக் கவலையில்லை.

ஆனால் கழகத்தால் அந்த காமராசர் சிலைக்குக் கடுகளவு ஊறும் நேராது. என்ற உறுதியை மட்டும் விகடனும் விகடனை ஒத்த கருத்துடைய மற்றவர்களும் நம்பலாம்.


# காஞ்சி

## 4-ம் ஆண்டு மலர்

**வந்தால்-தந்தால்-தருவேன்!**
(அமைச்சர் மா. முத்துசாமி)

**அரிமா நோக்கு!**
(என். வி. நடராசன்)

**விரலுக்குத் தக்க வீக்கம்!**
(மா. கி. தசரதன்)

**எனது பயணம்!**
(அரங்கண்ணல்)

**மெய்யறிவு!**
(அ. மு. பரமசிவானந்தம்)

**இரவு என்ற குருவி!**
(சோமு)

**ஆகா! ஜப்பான்!**
(அண்ணல்)

**இரட்டைக் கொலை!**
(எஸ். எஸ். தென்னரசு)

முதலான கருத்துக் கருவூலங்களோடு

**அறிஞர் அண்ணாவின்**
**அமெரிக்கப் பயணத்தில்...!**

என்ற தலைப்பில் அண்ணாவின் தனிச் செயலாளர் கு. சொக்கலிங்கம், I.A.S. அவர்களது புதிய செய்திகளோடுகூடிய சிறப்புக் கட்டுரையும்,

**அறிஞர் அண்ணா அவர்கள்**

படைக்கும் தீஞ்சுவைக் காப்பியங்கள் பலவோடு

**செப்டம்பரில் வெளிவருகிறது!**



# வேடனும் வெண்புறாவும்

எஸ்.எஸ். தென்னரசு.

## 4. நீ முத்துதா—உன் சொத்தைத் தருகிறேன்!

தோகை போன்ற நெடுங்கூந்தலை அள்ளி முடித்து, தொகை தொகையாய் வெள்ளைப் பூக்களை அதனில் சூடி மிதந்து வரும் நிலவைப்போல் தவழ்ந்துவரும் படகைப்போல் டெல்பிக்குப் போனாள் அல்பாஷியா. அந்தப்புரத்திலிருந்து அன்னம் வரும் என்று டெல்பி குரு எதிர்பார்க்கவில்லை. இரவு நேரம் அவள் பூசியிருந்த நெஞ்சைக் கிளரும் வாசனைத்திரவியங்கள் அவளுக்குமுன் ஆலயத்திற்குள் போய் விட்டன. திராட்சை ரசம் பருகிக்கொண்டிருந்த டெல்பிகுரு தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டு மண்டபத்திற்குள் போய்விட்டாள்.

பால்வடியும் வதனம்—பளிங்குச் சிலைமேனி—களங்கமில்லாக் காதல் நெஞ்சம் பாவம் அந்த ராஜகுல யுவதி டெல்பிக்கு முன்னே நின்று தேம்பியழுதாள்.

"அல்பாஷியா வந்திருக்கிறேன் அண்ணலே! நினைத்தபடி நடந்துவிடும் என நேற்றுவரை எண்ணியிருந்தேன். ஆடினேன், அந்தப்புரத்தில் அனைவருக்கும் பரிசுகள் வழங்கினேன், தேடக் கிடைக்காத தமிழ்நாட்டின் முத்தையும் பவழத்தையும் சூரையிட்டேன். ஆனால் இன்று நான் சாகத் தயாராகிவிட்டேன், வாழப் பிடிக்கவில்லை. என் ஆருயிர்ப் பெர்க்ளீசைக் காணவில்லையாம். என் தந்தை மயங்கிக் கிடக்கிறார். இன்றுதான் எங்களுக்குத் தகவல் கிடைத்தது கெல்லாஸ் மண்டலம் கண்ணீரில் மூழ்கிக் கிடக்கிறதாம்! பெண்ணடிமை நான் பேதலித்து நிற்கிறேன். தீபமேற்றி எனக்கு திசை காட்ட வேண்டுகின்றேன்!" அல்பாஷியா பெர்க்ளீசின்பால் வைத்திருந்த உயிர்க் காதலை சொல்லால் படைத்தாள்—கண்ணீரால் எழுதினாள்.

டெல்பி இளகவில்லை. இரக்கம் வெற்றிக்கு எதிரி என்ற ராஜகுலத்தின்பாலபாடத்தை அவர்கள் பக்கமே திருப்பிக்காட்ட சந்தர்ப்பம் கிடைத்ததை நினைத்து டெல்பியின் நெஞ்சு சுவைநீர் கூட்டி நின்றது. இது அல்பாஷியாவுக்குத்தெரியுமா? டெல்பி, கெந்தகப் புகைக்குள்ளிருந்து லேசாகச் சிரித்தாள். சிரிப்பா அது! சிரிப்பின் ஒலி! நாகம் சிரிப்பதில்லை! யானை சிரிப்பதில்லை.

"அல்பாஷியா! நீ பெர்க்ளீசைக் குறைத்து மதிப்பிடுகிறாய்! தவறு பெண்ணே! உங்களுடைய காதல் உயிர்க் காதல்! பர்வதத்தினும் உயர்ந்தது. பரந்த கடலினும் விரிந்தது. காதல் முறிந்தாலே காதலர் மாய்வதுண்டு! பெர்க்ளீஸ் சாகமாட்டான்! வருவான்! உன்னைச் சந்திப்பான். என்றால் ஒன்று செய்ய முடியும். டெல்பி ஆலயத்தின் மறு கட்டளை வரும்வரை பெர்க்ளீசை நாடு கடத்திவைக்கும்படி ஆக்ஞை பிறப்பித்துள்ளேன். உனது கண்ணீருக்காக—காதலுக்காக பெர்க்ளீசின் அயல்நாட்டு வாசத்தைப் பெரிதும் குறைத்து அடுத்தகட்டளையை விரைவில் கிளிஸ்தெனிசுக்கு அனுப்பிவைக்கிறேன். அஞ்சற்க செல்வி! இத்தனையும் செய்தால் டெல்பிக்கு உன் காணிக்கை?" குழைவாகக் கேட்டாள் டெல்பி குரு.

"காணிக்கையா? எதைக் கேட்கிறீர்கள், அதைத் தருகிறேன்!"

"பொன்வேண்டாம் பொருள் வேண்டாம்! கிரேக்கத்து டெல்பிக்கு செல்வத்திற்கா பஞ்சம்?...... அல்பாஷியா, தமிழ் நாட்டைப்பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய் என்று நினைக்கிறேன். அங்கு சோழதேசம் என்று ஒ[illegible] இருக்கிறதாம்! அது முத்துப்ப[illegible]ாம்! அங்கு ஒரு சிறந்த முத்து இருக்கிறதாம். அதை உரைத்துக் குடித்தால் வாலிபம் சாகாதாம்! பொலிவு குன்றாதாம்! உன்னைத் தவிர அது யாருக்குக் கிடைக்கப்போகிறது! உன்னால் அதைப் பெறமுடியும்! அதுதான் டெல்பிக்கு நீ செலுத்தவேண்டிய காணிக்கை. செய் கண்ணே! முத்து கிடைத்த அன்று, நீ பித்துப் பிடித்து அலையும் காதலனை மீட்டுத் தருகிறேன்" என்றாள் டெல்பி. சபலம் அவளை விழுங்கிவிட்டது. குரு, சுயநலத்திற்கு ஆட்பட்ட சாதாரண மனிதனைப்போல் பேசிவிட்டாள். அழகுக்கு எதிரே வீரம் தணிந்துவிடுகிறது! ஆசைக்கு முன்னே பிடிவாதம் இளகி ஓடிவிடும்போலும்!

அல்பாஷியாவுக்கு, வரும்போது இருந்த கவலை போகும்போது இல்லை. குதூகலமாகப் போனாள். காசை இரைத்து காவிரிநாட்டு முத்தைப் பெற்றுவிடலாமென்று எண்ணிக் குதித்தோடினாள்.

டெல்பி வெற்றிச் சிரிப்புச் சிரித்தாள்.

"ஜூனோ என் அருமைச் சகோதரி உன்மீது நான் கோபம்கொள்ளவில்லை. நான் [illegible]கோவை விரும்புகிறேன்! [illegible]கோ உன்னை விரும்புகிறான், [illegible]லம் கருதி நீ அவனை ஏற்க [illegible]றாய் நீதான் கிரேக்கத்தின் பெண் தெய்வம்! நீ என்னிடம் அடிக்கடி கேட்ட தமிழ் நாட்டுமுத்துக்கு வழிதேடிவிட்டேன்

"ஏ டிராக்கோ, பெண்கள் கர்வத்தில் யானையையும் மிஞ்சியவர்கள்; நான் உன்மேல் உயிராக இருக்கிறேன். நீயோ வெறுக்கிறாய்! நீ வாழமுடியாது. உன்னை வாழவிட மாட்டேன். இதோ உனக்கும் உன் தம்பிக்கும் பகை மூட்டத் திட்டம்

தீட்டிவிட்டேன்'' டெல்பி அகங்காரமாகச் சிரித்தாள். அந்த ஆணவச் சிரிப்பின் வெற்றி முழக்கம், புகை மண்டலத்தைத் துளைத்துக் கொண்டு பீறிட்டு வெளிவந்தது.

கிரேக்க மக்களுக்குத் தெரியாமல் கெல்லாஸ் மண்டலத்திலும், தெசாலி மண்டலத்திலும் இப்படி இரு சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டன. மூன்று திங்கள் ஓடி மறைந்தும் பெர்க்ளீஸ் இருக்குமிடம் தெரியவில்லை. கிளிஸ் தெனீஸ் மேனி கரைந்து கொண்டிருந்தது, அவன் முகத்திலே காணப்பட்ட ராஜகளை இப்போது இல்லை. தன்னுடைய ஆட்சிக்குக் கெட்டகாலம் தொடங்கிவிட்டதாகவே அவன் கருதினான். ராஜ்யத்தைக் கவனிக்க அவனுக்கு அக்கறை ஏற்படவில்லை. எந்த நேரமும் அவன் தனிமையிலேயே இருந்தான், அவை அதிரச் சிரிப்பான்; சுவை கொட்டப் பேசுவான்; நல்லோருக்கு அவன் உத்தமன்; மற்றோருக்குஉன்மத்தன். இப்போது அவன் கூனிக் குறுகிவிட்டான். டிராக்கோவும்போயிருந்தால் அவனோடு கிளிஸ் தெனீசின் உயிரும் போயிருக்கும்.

மன்னனின் மனச்சோர்வை, கெல்லாஸ் மண்டலத்தின் தீயவர்கள் பயன்படுத்தத் தொடங்கினார்கள். குழப்பங்களும் கலவரங்களும் மலிந்து விட்டன. வலியவர்கள் தலைவர்களானார்கள். எளியவர்கள் உதைபட்டார்கள்—பலர் இறந்தும்போனார்கள். நாட்டில் நாணயப் பஞ்சம் ஏற்பட்டது.

கெல்லாசில் எழுந்த அரசியல் குழப்பம்,தெசாலியையும் பாதித்தது. அதையொட்டியிருந்த பெலபோனிசஸ், மாசிடோனியாவும்கூட இதனால் தொல்லைப்பட்டன. தூதுக் குழுகள் பல கிளிஸ் தெனீசைச் சந்தித்து சுபிட்சத்திற்கு வழிகோரின. நிலைமை கவலைக்கிடமாகும் வரை கிளிஸ் தெனீஸ் விழிக்கவில்லை. பெர்க்ளீஸ், பெர்க்ளீஸ் என்றே புலம்பிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் திடீரென்று அவனுக்கு நாட்டுக் கவலை ஏற்பட்டது. தலைநகரில் பழைய பொலிவு இல்லை என்பதை உப்பரிகையிலிருந்து பார்த்துத் தெளிந்தான் இடிந்த வீடுகள் எடுத்துக் கட்ட வகையின்றி இடிந்தவை இடிந்தவையாகவே இருப்பதைக் கண்டான். ஒடிந்த உள்ளத்தினர் நிமிர்ந்து நடக்க வகையில்லாமல் மடிந்துகொண்டே இருந்தார்கள். கிளிஸ்தெனீஸ் இவற்றிற்கு முடிவு கட்டத் தீர்மானித்தான். கிரேக்க நாட்டின் பொதுச் சபையைக் கூட்டி ஆலோசனை கேட்க விரும்பினான். கெல்லாசில் முரசு முழங்கியது; அது தெசாலியில் எதிரொலித்தது. எல்லா நாட்டுப் பிரதிநிதிகளும் கெல்லாஸ் அரண்மனையில் கூடினார்கள். கிரேக்கத்தில் நாணயப் பஞ்சம் ஏற்பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்தார்கள். தெசாலி நாட்டின் ஆலோசனைக் குழுத் தலைவர். தமிழ் நாட்டு அழகுப் பொருள்கள் கிரேக்கத்தில் அதிக



மாக விற்பனையாவதே. இங்கு நாணயப் பஞ்சத்திற்குக் காரணம்'' என்று வாதித்தார். பொதுச்சபை இதை ஏற்றுக்கொண்டது. அடுத்த நாள்காலை கிரேக்கமெங்கும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

* * *

தெசாலியின் அந்தப்புரத்தின் உச்சிமாடத்தில். அல்பாஷியா நின்று கொண்டிருந்தாள். கீழே முரசொலி கேட்டது......

''தேசாலி மண்டலப் பொது மக்களுக்கு ஒரு எச்சரிக்கை! கிரேக்க நாட்டுப் பொதுச் சபையின் முடிவுக்கிணங்க, தமிழ் நாட்டுத் திரவியங்கள் நமது நாட்டில் இறக்குமதி ஆகக்கூடாதென்று இன்று முதல் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. கள்ளத்தனமாக வரும் தமிழ் மரக்கலங்களை ஆதரிப்பவர்களும் அவர்களிடமிருந்து முத்து, பவளம்போன்ற திரவியங்களை விலை கொடுத்து வாங்குபவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அவர்கள் மீது திருட்டுக் குற்றம் மட்டுமல்ல, ராஜத் துரோகக் குற்றமும் சுமத்தப்படும்''

மாடத்தில் நின்ற இளவரசி அல்பாஷியா திகிலுற்றாள். தன்னுடைய காதலின் வெற்றிக்கு இந்தச் சட்டம் ஒரு இடையூறு என்று கருதினாள். அவளுக்கு ஆறுதல்கூற அருகில் தோழிகள் இல்லை. மலை அடிவாரத்து, அடர்ந்த காடுகளில் தங்கல் பழங்களைப்போல் காய்த்துத் தொங்கும் ஆரஞ்சுக் கொத்தைப் பார்த்து அடிக்கடி பரவசப்படுபவளை மலைமுகட்டின் நுனிப்பாகம் மேகத்தைத் துளைத்துக்கொண்டு வென்று முடிசூட்டியிருப்பதை வாணிப்பவளை,பச்சைப்பட்டுப்போன்ற இயற்கை எழிலின் மகோன்னதத் தோற்றத்தை இசைகூட்டிப் பாடுபவளை, கிரேக்க நாட்டுப் பொதுச்சபை பிரகடனப்படுத்திய அவசரத் தடை உத்தரவு கலகலக்க வைத்தது. விரிந்து கிடந்த கூந்தலை அணைத்துத் தோளில் போட்டுக்கொண்டு உள்ளே ஓடினாள். ''பெர்க்ளீஸ் வேண்டுமானால், எனக்குத் தமிழ் நாட்டு முத்துகொண்டுவா'' என்று டெல்பி இட்டகட்டளை அல்பாஷியாவின் இதயத்தை அறுத்துக் கொண்டிருந்தது.




## பகுத்தறிவு

ஆராய்ச்சி செய்ய மறுப்பவன்—வெறியன்; ஆராய்ச்சி செய்ய முடியாதவன்-மூடன் ஆராய்ச்சி செய்ய அஞ்சுபவன் –அடிமை.

–சர். W. டிரம்மண்ட்

# ‘மனிதன்’ என்பவன்!

‘மனிதன் ஓர் அரசியற் பிராணி’ என்றான் பேரறிஞன் பிளேட்டோ. இன்னும் சிலர் மனிதன் என்பவன் பல்வேறு வகைப்பட்ட உணர்ச்சிக் குவியல்களின் மொத்த வடிவம் என்பார்கள். நாம் எதனை ஏற்றுக் கொள்வது?

‘மனிதன் பிரச்னைக் குரியவன் தானே! அவனது வாழ்க்கை என்றுமே ஒரு வினாக்குறியாகவே இருந்திருக்கிறது. சில நேரங்களில் அது வியப்புக் குறியாக இருந்து சிலரை வியப்பில் மூழ்கடித்திருக்கக் கூடும். அல்லது இன்னும் சில நேரங்களில் அது முற்றுப் புள்ளியாக முடிந்து பலரை மகிழ்ச்சியில் ஆழ்த்திருக்கக் கூடும். கிரேக்க நாட்டறிஞன் [மன்னிக்கவும்! சாக்ரடீஸ் கிரேக்க நாட்டிற்கு மட்டுமே உரியவன் அல்ல. அவ்வாறு அழைப்பது அந்த மாமேதையை அவமானப் படுத்துவதாகும். ஏனென்றால் அவன் பெருமிதத்தோடு சொன்னான்:-“I am not an Atherian nor a Greek, but a citizon of the world.”]

அந்த உலகத் தத்துவ மேதை மிகவும் கர்வத்தோடு சொன்னான்.

‘பலர் உண்பதற்காகவே வாழ்கிறார்கள்! நானோ வாழ்வதற்காகவே உண்கிறேன்!’ என்று. அவன் தன்னை இங்கே ஒரு ‘மனித’னாகக் காட்டிக் கொள்கிறான்.

‘டயக்னஸ்’ என்னும் பேரறிஞன் பட்டப்பகலில் கையில் ஒரு விளக்கினைப் பிடித்தபடியே இங்கு மங்குமாய் அலைந்து கொண்டிருந்ததைக் கண்ணுற்ற சிலர் வியப்புடன் அவனை நோக்கிக் கேட்டனராம்.

“ஐயனே!... இந்தப்பட்டப்பகலில் ‘விளக்கொளியில் நீ யாரைத் தேடுகிறாய்?” என்று.

அதற்கு அந்தப் பெரியவனோ கொஞ்சமும் தயங்காமல் மிகவும் ஆணித்தரமாகச் சொன்னானாம்!

“நான் ஒரு ‘மனிதனை’த் தேடுகிறேன்!” என்று.

அப்படியானால் ‘மனிதன்’ என்பவன்தான் யார்? ‘டிரைடன்’ என்னும் அறிஞனோ’ மனிதர்கள் எல்லோரும் வளர்ந்த குழந்தைகளே!’ என்று செல்லமாக அழைக்கிறான். இந்தச் சொற்களைக் கூர்ந்து கவனிக்கும்போது ‘மனிதர்களெல்லோரும் உள்ளத்தால் முதிர்ச்சியுறாத முட்டாள்களே!’ என்ற கருத்தும் தொக்கி நிற்கவில்லையா?

ஒரு ‘மனிதன்’ தவறிழைத்துவிட்டான் என்று குற்றம் சுமத்தி அவனை எல்லோருமாகச் சேர்ந்து சிறையில் அடைத்து விட்டார்களாம். அப்போது அந்தச் ‘சிறைப் பறவை’ என்ன நினைக்குமாம் தெரியுமா?...

‘மனிதனைச் சிறையிலிட்டால் அவனைத் திருத்தி விடலாமென்று நினைக்கிறார்களே அது வெறும் பொய்க் கனவு! எனக்கு மரண தண்டனை விதித்திருந்தால் நான் அதை மகிழ்ச்சியோடு ஏற்றிருப்பேன். என்னை இங்கு இவர்கள் சாகவும் விடவில்லை; பிழைக்கவும் விடவில்லை.’ என்றுதான் அவன் கூறுவானாம். இப்படி நான் கூறவில்லை. ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர் இப்படி எழுதியிருக்கிறார். அது போகட்டும். எனக்கு இங்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. பைபிளில் வருவது.

ஒரு பெண் நடத்தைக் கெட்டடள் என்பதற்காக சில ‘மனிதர்கள்’ ஒன்றாகக் கூடி அவள் மீது கற்களையும் கழிகளையும் வீசுகிறார்களாம். அப்போது ஏசுபிரான் அந்த வழியாக வருகிறாராம், அவர்களைப் பார்த்து அவர் கூறுகிறாராம்.

‘எவனொருவன் தன் வாழ்விலே பாவம் செய்யாதவனோ அவன் இவள்மீது இல்லை எடுத்துப்போடட்டும்!” என்று. அதன் பிறகு அவளை அடிக்கும் துணிவு அங்கிருந்த எவருக்கும் எழவில்லையாம்!......அப்படியானால் ‘மனிதர்கள்’ அனைவருமே ‘வெறும் பாவப் பிண்டங்கள்தாமா?’.

கவியரசர் தாகூர் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார் “மனிதனுடைய இன்பத்தில் ஒரு பகுதிதான் நனவு! எஞ்சி இருப்பவைகளெல்லாம் கனவுதான்!” என்று. அப்படியானால் தன் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கற்பனையுலகிலேயே கழித்துக்கொண்டிருக்கும் ஓர் அசட்டுப் பிறவிதான் ‘மனிதனா?’

‘மனிதன்! எத்துணை உயர்வாக இச்சொல் ஒலிக்கிறது!’ என்றார் பாட்டாளி வர்க்க இலக்கியத்தின் பிதா மாக்கிம் கார்க்கி. அப்படியானால் ‘மனிதன்’ என்பவன் ‘மனிதாபிமானத்தின் சின்னமா?’

அதுவும் போகட்டும். இப்போது இன்னொரு சிக்கலான கேள்வி எழுகிறது. ‘மனிதன்’ எதற்காகத்தான் இந்த உலகில் வாழவேண்டும்?’

‘வாழ்க்கையில் மற்றவர்களுடைய துன்பத்தைத் துடைப்பதற்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும். நம் அன்பினால் அவர்கள் துன்பச் சுமையை குறைக்க முயலவேண்டும். இதைக்கூட நம்மால் செய்ய முடியவில்லையென்றால் நாம் எதற்காகத்தான் இந்த உலகில் வாழவேண்டும்!” என்று கேட்கிறார் ஜார்ஜ் எலியட். அதாவது மனிதன் தனக்காக அல்லாமல் மற்றவர்களுக்காகத்தான் வாழவேண்டுமா? இன்றைய உலகில் அப்படித்தான் ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்துகொண்டிருக்கிறானா? அப்படித்தான் அவன் வாழவேண்டுமா? அதுதான் முறையா?...

‘மனிதன்’ அடிக்கடி சோர்ந்து விடுகிறானே அது ஏன்?...

அவன் மனத்தில் இருள் சூழ்ந்து அழுக்கு நிரம்பி வழிகிறதே அது ஏன்?...

ஏன் தெரியுமா?...... ‘மனிதன்’ தேங்கி நிற்கிறானாம்! அதனால் தானாம்!

தண்ணீர் அழுக்கடைவதில்லையாம்! ஏனென்றால், அது ஓடிக் கொண்டேயிருக்கிறதாம்!

தண்ணீரின் ஒரு துளிதான் நதியாக, மகாநதியாக, பிறகு பெரிய கடலாக மாறுகிறதாம்!

எப்படித் தெரியுமா?...அது ஓடிக் கொண்டேயிருக்கிறதே. அதனால் தானாம்! இதனால்தான் சதுரசேன சாஸ்திரி ‘மனித’னைப் பார்த்துக் கூறுகிறார்.

‘ஏ, மனிதா! நீ தேங்கி நிற்காதே! ஓடிக் கொண்டே இரு! முன்னேறிக் கொண்டே இரு!” என்று.

சரி சரி இந்தக் கட்டுரையை நான் முடித்து விடுகிறேன். ‘மனிதன்,

(10-ம் பக்கம் பார்க்க)

# அழகு முகம்



அரிமதி தென்னகன்.

பெருந்தகையீர், வணக்கம்.

அன்பரே என்று அழைத்தவள், பெருந்தகையீர் என்றுபெருந்தன்மையோடு அழைக்கிருளே என்று வியப்படைகிறீர்களா? எப்படி அழைப்பது என்ற போராட்டத்தில் எத்தனைத் தாள்களை வீணடித்தேன் தெரியுமா? என்னுல் கசக்கி எறியப்பட்ட தாள்கள், என்னைப் பார்த்து, "என்னைப்போல நீ எவ்வளவு அன்பினை வீணடித்தாய் தெரியுமா?" என்று கேலி செய்தன.

"என்ன கமலா, காதலித்தாய்; கைபிடிக்கவேண்டிய காலத்தில் என்னவோ பேசுகிருய்?" என்று உங்கள் உதடுகள் துடிக்க, உள்ளம் ஓலமிட, உணர்வு கொந்தளிப்பதை என்னுல் அறிய முடிகிறது.

உங்களை நான் காதலித்தேன்; உண்மைதான்; சிறிய வயதுக் குழந்தைகள் விளையாட்டுப் பொம்மைகளை விரும்புகின்றன! அம்மா வேண்டுமா? பொம்மைவேண்டுமா? எனக்கேட்டால், பொம்மைதான் வேண்டும் என்கின்றன. குழந்தைகளுக்குத் தாயைவிட, பொம்மைகளே உயிராகத் தெரிகின்றன. அதுபோல்தான் என் நிலையும்! உண்மையினை அறியும் தன்மையும், தெளிந்த அறிவும் இல்லாத நானும் ஒரு குழந்தைபோல்தான் இருந்தேன். பொம்மைக் கவர்ச்சிபோல் உங்கள் உருவ அழகும், வெளித்தோற்றமும் என்னைக் கவர்ந்தன. உம்மை என் உயிராக நினைத்தேன். கள்ளுண்டு மயங்கியவனுக்கு மண்ணும் பொன்னுகத் தெரியும், பொன்னும்மண்ணுகத் தெரியும்.

ஆம்! காதலும் ஒருவகைக் கள் தானே?

இளமையில் இருந்தே எனக்குத் தாய்மொழி உணர்வும் தன்மானப் பற்றும், தாயக அன்பும் என் குருதியோடு கலந்திருந்தன.

தாய்மொழிப் பற்று உங்களுக்குக் குறுகிய நோக்கமாகப்பட்டது. மொழி இனத்தின் உயிரென்பேன் நான்; மக்கள் பேசுவதற்கு மனிதனுல் படைக்கப்பெற்ற ஓர் எளிய கருவி என்பீர்கள் நீங்கள். பிறமொழியின் ஆதிக்கம் தாய்மொழியை அழிக்கும் எனச் சொல்வேன் நான். அதை ஏற்க மறுப்பீர்கள் நீங்கள். இவ்வாறு நீங்களும் நானும் இரு முனைகளாகவே இருந்தோம்.

'உண்மை வெல்லும்' என்ற உறுதியில் தாங்களும் திருந்திவிடுவீர்கள். உங்கள் உள்ளத்தில் வளர்ந்துள்ள பொய்மைப்புற்று கால வெள்ளத்தில் கரைக்கப்படும் என நம்பினேன். ஆனுலும் தோற்றேன்!!

'தோல்வியே வெற்றியின் முதற் படி' என்ற முதுமொழி என்னைப் பொருத்தவரை முற்றும் உண்மையாகிவிட்டது. உங்களைப் பற்றிய முடிவில் தோல்விபெற்ற நான், என்னைப் பொருத்தவரையில் வெற்றி பெற்றுவிட்டேன்.

"என்னம்மா இது புதிய அறிவு" என்று என்னைக் கேட்கலாம்போல் உங்களுக்குத் தோன்றுகிறதா?

"இவையெல்லாம் நடந்துவிட்ட தவறுகள் என்ற பதிலைத்தான் நான் உங்களுக்குத் தர விரும்புகிறேன். அறியாமல் செய்த தவறுதான். அறிந்து செய்யும்போது குற்றமாகின்றது. தங்களைப் புரிந்துகொள்ளாத காலத்தில் செய்த தவறை, புரிந்த பிறகும் செய்து குற்றவாளியாக ஆக நான் விரும்பவில்லை.

அந்த சனவரி 24-ஆம் நாள்தான் உங்களை எனக்குத் தெளிவாகக் காட்டிய நாளாகும். "இந்திக்குச் சட்டப்படி முடிசூட்டும் சனவரி 26 ஆம் நாள்பற்றித் தங்கள் கருத்தென்ன?" என்று நான் கேட்டேன்.

அதற்கு "கமலா இதெல்லாம் ஒரு அற்பமான கேள்வி என்று கருதுகிறேன். மனிதன் பிறந்தது வாழ்வதற்காக; வாழ்கிற நாளில் பெறுகிற இன்பங்களை எல்லாம் பெற்றுகவேண்டும். அந்த குறுகிய காலத்தில் கொள்கை, போராட்டம் என்பதெல்லாம் முட்டாள்தனம் என்று கருதுகிறேன்.

கமலா, அந்த அழகிரியைத்தான் தெரியுமே உனக்கு; கல்லூரியின் இலக்கியமன்றச் செயலாளன், மொழிக்காப்பு மன்றத்தின் தலைவர் என்றெல்லாம் பேசிக்கொண்டு திரிவானே, அவனைப்போன்ற வாழத்தெரியாத 'முண்டங்கள்'தான், 'தமிழ், அது உயிர்' என்றெல்லாம் பேசுவார்கள். எந்தமொழி ஆண்டாலென்ன? எந்த மொழி செத்தாலென்ன?

என்னைக் கேட்டால், மொழியே வேண்டாம் என்றுகூடச் சொல்வேன். மொழியே இல்லாத காலத்தில் மனிதன் மகிழ்ச்சியோடு வாழவில்லையா? ஏன்? ஊமைகள் எல்லாம் உலகத்தில் உள்ள மகிழ்ச்சியோடு இல்லையா?" என்றெல்லாம் நீங்கள் பேசியது எனக்கு வியப்பாக இருந்தது.

அழகிய உடலில் அற்பமான எண்ணங்கள் இருப்பதை எண்ணி நொந்தேன்.

கொள்கைக்காக வாழும் குறிக்கோளோடு, தமிழ்மொழியைத் தன் இரு விழிகளாகக் கருதும் அழகிரியை 'வாழத்தெரியாத முண்டம்' என்று சொல்லிடபோது என் மனம் பற்றி எறிந்தது.

மறுநாள் சனவரி 25-ஆம் நாள்.

மாணவர்கள் அணி, தங்கள் மனதையும், நெஞ்சில் கமழும் தமிழ் மணத்தையும்; வேற்று மொழி ஆதிக்கத்தை விழி கொடுத்தும் தடுப்போம். எனும் வீர உணர்வையும் நாட்டினர்க்கும், அரசினர்க்கும் அறிவிக்க ஊர்வலம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்ததால், காவல்

துறையினரின் 'கெடுபிடிகள்' சற்று கூடுதலாகவே காட்சியளித்தன.

'இந்தி ஒழிக' 'தமிழ் வாழ்க' என்ற முழக்கோடு தொடர்ந்த ஊர்வலம், நீங்கள் வழக்கமாகச் செல்லும் அந்த 'சங்கம்' இருக்கும் இடத்தை நெருங்கியது. தமிழகத்தில் பிறந்த ஒரு தமிழன், தான் வாங்கிய கூலிக்காக, 'இந்தி வாழ்க' 'தமிழ் ஒழிக' என்று குரைப்பான்' என்பதை நான் அங்குதான்தெரிந்து கொண்டேன்!

யாரும் எதிர்பாராத வகையில் சிலர், கத்தி, வேல்கம்பு, தடிகளோடு கூட்டத்தினரைத் தாக்கினர். ஒரே குழப்பம், வெட்டுங்கள், குத்துங்கள் என்ற ஒலிகள்; "அழகிரியை வெட்டுங்கள்; அவன்தான் தலைவன்; அவனை விடாதே" என்ற காட்டுக் கூச்சல்கள்.

இந்தக் கூச்சலுக்கு உரியவர், இந்தக் குழப்பத்திற்கு முதல்வர், நடந்து முடிந்த குத்து வெட்டுக்களுக்கு எல்லாம் வழி வகுத்தவர் தாங்கள் என்பதை நான் அன்று என் கண்ணாலேயே கண்டேன்.

ஊர்வலம் சிதறியது. காலிகள் மறைந்தனர்; அதே நேரத்தில் நான் கண்டது, அப்பப்பா...!! எப்படிச் சொல்வேன். பல மாணவர்கள் வெட்டப்பட்டு வீழ்ந்து கிடந்தனர். அழகிரியைக் குருதி வெள்ளத்தில் கண்டேன். ஐயோ என்ற முனகலோ, அம்மா என்ற ஒலியோ அவர் வாயிலிருந்து வரவில்லை. 'தமிழ் வாழ்க' என்ற ஒலிதான். அவரின் வாயிலிருந்து தயங்கித் தயங்கி வந்தது. அந்த உணர்வை எண்ணி எண்ணி உள்ளம் நெகிழ்ந்தது.

நாட்கள் நகர்ந்தன. அழகிரியைப் பற்றி வரும் செய்திகள் அச்சத்தைச் சுமந்து வந்தன.

ஒரு நாள்...

தமிழ் தவழும் அந்த வீர நெஞ்சனை, மான மறவனைக் காண அழகிரியின் இல்லம் சென்றேன். அவரைக் கண்டேன். கண்ணீர்க் குளமாய்க் காட்சி தந்த அழகிரியின் அன்னையைக் கண்டேன். புருவம் இறங்கி, கன்னங் கிழிந்து, காது அறுபட்டு கண்கள் கலங்கி, சிதைக்கப்பட்ட சிலையாக இருந்த அழகிரியைப் பார்த்துப் பார்த்து வெதும்பியது அந்த தாயின் நெஞ்சம்.

நான் யார் என்பதையும், என் பெயரையும் அறிந்துகொண்ட அழகிரியின் அன்னைக்கு ஏற்பட்ட வியப்பிற்கு என்ன காரணம் என்றே எனக்குத் தெரியவில்லை.

'அம்மா கமலா, உன்னைப் பற்றி அழகிரி அடிக்கடி சொல்லிப் பெருமைப்படுவான். அவனைப் போலவே நீயும் மொழிப் பற்றும் கொள்கையும் கொண்டவள் என்று அடிக்கடி சொல்வான்.



கமலா, நான் சொல்வதைக் கேட்டுத் தப்பாக நினைக்காதே. உன்னை மணந்துகொள்ள விரும்பினானம்மா அழகிரி. எல்லா வகையிலும் தனக்குப் பொருத்தமானவள் நீதான் என்று அவன் சொல்லாத நாளே கிடையாதம்மா.

என்னுடைய வற்புறுத்தலுக்காக என் அண்ணன் மகளை மணக்க ஒப்புதல் அளித்தான்; திருமண ஏற்பாட்டிற்கும் உடன்பட்டான்; இவனுக்கு ஏற்பட்ட இந்த நிலையை அறிந்து பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணைத் தர மறுத்துவிட்டார்கள். உண்மைதானே — கமலா; இந்தக் கொடூர முகத்தை எந்தப் பெண்தான் விரும்புவாள்."

அழகிரியின் அன்னையால் இதற்கு மேல் பேச முடியவில்லை. நாங்கள் பேசியதை எல்லாம் அழகிரி கேட்டு அழுதுகொண்டிருந்தார் என்பதைப் பிறகுதான் நான் அறிந்தேன்.

"வருத்தப்படாதீர்கள் அழகிரி" என்று நான் ஆறுதல் கூறும்போதே அழுதுவிட்டேன்.

"எதற்கும் கவலைப்படவில்லை கமலா; ஒரே மகனைப் பிறந்து, என் தாயின் ஆவலை நிறைவேற்ற முடியாதவனாக காலம் என்னை ஆக்கி விட்டது பார்த்தாயா? என்னோடு என் பரம்பரை அழிந்து விடுவதை என்னால் நினைக்கக்கூட முடியவில்லை. பணத்தால் பெண்ணை விலைக்கு வாங்க இந்த ஏழையால் தான் முடியுமா? அதற்கு என் உள்ளந்தான் இடந் தருமா?

கமலா நான், ஒரு துணை விரும்பு

யது. கடற்கரையில் இணைந்து உலாவ, காதல் இன்பத்தை அள்ளிப் பருக, இளமைக் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள என்று நினைக்கிருயா? இல்லை; இல்லவே இல்லை. மொழி காக்கும் பெரும் படைக்கு எனக்குப் பின் என் பங்காக, என் பிள்ளைகளை ஆக்கவே துணைவியை விரும்பினேன்.

என்னென்ன கனவுகள் கண்டேன் தெரியுமா? பாலூட்டும் போதெல்லாம் பைந்தமிழ் உணர்வை ஊட்டுவேன்; விளையாட்டுக் காட்டும் போதெல்லாம் தமிழ் வீரத்தை ஊட்டுவேன்; மொழி காக்கும் போரில் என் மகனே முதற் களபலியாக மாண்டான் எனக் கேட்டு மகிழ்வேன்'' என்று அழகிரி சொல்லிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் என் உணர்வைச் சிலிர்க்க வைத்தன. என்னென்னவோ உணர்வு அலைகள் என் உள்ளக் கடலில் எழுந்தன.

அதன் முடிவு......?

மொழிக்காக வாழ்வை இழந்த அழகிரிக்கு எதைக் கொடுத்தாலும் சிறிதுதான். அவர் விரும்பும் பொருளைக் கொடுத்தால்...? சிந்தித்தேன்; மொழிக்காகத் தன்னையே எரியூட்டிக்கொண்ட அந்த மறைந்தும் மறையாத தெய்வங்கள் என்முன் தோன்றினர். அந்தத் தமிழ்க் குலக் கடவுள்கள் எல்லாம் அழகிரியின் உருவத்தில் என் கண்கள் கண்டன.

அந்த தெய்வத்தை வழிபடும் உண்மையான அன்பராகஎன்னையே நான் எண்ணினேன்.

அப்போது...!!

அழகிழந்த அழகிரியின் முகம் என்ன ஒளியாகத் தெரிந்தது! வான் மதி தோற்கும் வண்ண முகமாகக் காட்சி அளித்தது. மன்மதன் என்று சொல்லுவார்களே. அந்த அழகனே வெட்கும் அழகனுகவே அழகிரி காட்சியளித்தார். தமிழ் பழகும் அவரின் தங்க உள்ளம் அவரின் கொடுமையான முகத்தைக் குளிர் நிலவாகக் காட்டியது.

அழகிரி எனக்குத் தமிழாகக் காட்சியளித்தார் அந்தத்தமிழோடு இணைந்த இனிமையாக நான்கலந்து விட்டேன்.

இதுதான் காதலா? எனக் கேட்டீர்கள். உங்களை நினைத்து மறந்தால் நான் ஒரு கைம்பெண் என்று நினைத்துக்கொள்ளுங்கள். மறுமணம் செய்து கொள்வதை மலர்ந்துவரும் புதிய உலகம் ஏற்கத் துடிக்கிறது. நான் இப்படி நினைக்காவிட்டாலும் சொல்லுகிறேன், தமிழ் மொழிக்காகத் தன் வாழ்வையே இழந்தவர்க்கு என்னுலான நல்லதைச் செய்ததாக நிறைவு பெறுகிறேன்.

குருடனுக இருந்தாலும் மொழிப் பற்றுள்ளவனே விழி பெற்றவனுவான். கோழையாக இருந்தாலும் அவனே வீரனுவான்.

ஆமாம்! உலகத்திற்குக் குரூபியாகத் தோன்றும் அழகிரியின் முகம் என்னைப் பொறுத்தவரை என்றும் அழகு முகந்தான்.

கொள்கை அழகு குடியிருக்கும், குளிர்நிலவாம் முகத்தானைக் கணவனுப் பெற்றேன் என்னும் களிப்போடு இம்மடலை முடிக்கிறேன்.

இப்படிக்கு, அழகிரி-கமலா.

7-ம் பக்கத் தொடர்ச்சி

இப்படித்தான் வாழவேண்டும் என்ற அறிவுரையோடு!

'மனிதன்' எப்படி வாழவேண்டும்?...தாகூர் கூறுகிறுர் 'நாம்' இப்படித்தான் வாழ வேண்டுமென்று.

''சிதைந்து தேயும் செல்வத்தைப் பெறுவதற்காக இறைஞ்சி ஏங்கித் திரிவது மிகவும் இரங்குதற்குரியது. செல்வத்திற்காக ஏங்குவதை விட்டு செம்மையைத் தாங்கி வாழ்வோம். சாவுக்குப் பின்னுலும் நீடித்து நிலைக்கும் வாழ்க்கையை, எந்தச் சூழவிலும் எழுந்து சிறக்கும் வாழ்க்கையைப் பற்றுவோம். அதன் வழியாகப் பரமனையே காண்போம். மண்ணேடு மண்ணுய் மக்கிக் கிடக்கும் நம்மை மேன்மைப் படுத்தி ஈடேற்றும் நித்ய சத்தியத்திற்காக வாழ்வோம். உருக்குலையும் பொருள்களால் அன்றி உள்ளொளியாலும், அதிகாரத்திற்காக அன்றி அன்புப் பிணைப்பாலும். நம் வாழ்வுக்குப் பொன் முலாம் பூசும் நித்திய சத்தியத்திற்காக நாம் வாழ்வோம்.''

என்ன சொல்கிறீர்கள்?...'அப்படி' வாழ உங்களுக்கு சம்மதம்தானு?... இனி நாம் அனைவரும் விவேகானந்தரைப்போல்—அண்ணல் காந்தியடிகளைப்போல்—வாழவேண்டும்!

இன்னும், இன்னும் சிறந்த வாழ்க்கை; இன்னும் உயர்ந்த வாழ்க்கை; காலத்தைத் தாண்டி நிற்கக் கூடிய வாழ்க்கை!

அப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழ்ந்து காட்டவேண்டும்!

'அது முடியுமா?' என்று கேட்டு விடாதீர்கள்! 'முடியா விட்டால் போகிறது; ஆசைப்படுவதில் ஒன்றும் தப்பில்லையே!''

—வீ. ரா. சந்திரன்

## எதிர்காலம்!

ஈரைந்து மாதங்கள் இடைநோகச் சுமந்தஅன்னை
இன்றுன்னைக் காணுகிருள் பாப்பா—அவள்
இன்புறநீ முத்தம்கொடு பாப்பா!

காணுத புதுமையினைக் கண்டவராய் உன்தந்தை
களிப்பெய்து ஆடுகிருர் ஓடு—அவர்
கன்முன்னே வாய்திறந்துப் பாடு

நாள்முழுதும் உனக்காக நல்லிரவுத் தூக்கமின்றி
பால்கொடுத்து வளர்த்திடுவாள் அன்னை—தந்தை
நூல்கொடுத்து உயர்த்திடுவார் உன்னை!

அன்னைதந்தை தெய்வமென்று அவனியிலே நீவணங்கி
பொன்னைப்போல மின்னிடுவாய் நன்று—அறிஞர்
அண்ணனின்வழி சென்றிடுவாய் என்றும்!

வாகைசூழும் வள்ளுவனின் தேன்குறள் ஒளியாக்கி
வாழ்வினிலே காரிருளை வெல்லு—அவர்
வார்த்தமொழி உலகறியச் சொல்லு!

நீண்டகாலம் வாழ்ந்திருந்து நீளுலகில் பணிபுரிந்து
நேர்மையினை நிலைநாட்ட வேண்டும்—அது
ஈன்றவரின் கண்மலரத் தூண்டும்!

—கா. பூமிநாதன்

# கேள்வி ? பதில்

**1. சில காங்கிரஸ்காரர்கள், காமராசரைச் கொலை செய்யவும் தயாராக விருப்பதாகத் தெரிகிறதே?**

ஆமாம் ரோம் சா ராஜ்யத்தின் மகத்தான முன்னேற்றத்துக்குக் காரணமாகவிருந்த ஜூலியஸ் சீசரைப்போல் காமராசர் இருப்பதாகவும், சீசரைவிடவும் இவர் மகாசீசராகி இருப்பதாகவும், புரூட்டஸ்கள் அனைவரும் தயாராகும்படியும் காங்கிரஸ் ஏடொன்று தலையங்கம் எழுதி இருக்கிறது. காமராசர் சீசர்தான் என்றால் புரூட்டஸ்களும் இருக்கிறார்கள் என்பது பொருளாகி விடும்! "புரூட்டஸ் இசம்"களும் அவரைத் தொடரும் என்பதும் வரலாறாகிவிடும்! காமராசர் இனி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்! புரூட்டஸின் கை, சீசரைத் தொழுத கை! அதனுள்ளேதான் 'கில்லட்டின்'! காமராசரைத் தொழுவோரை, இனி சோதனை செய்துதான் அனுப்பவேண்டும்! காமராசர் சேவை (!) நாட்டுக்குத் தேவை ?)

**2. காங்கிரஸ் வரலாறு, காங்கிரஸ் வரலாறு என்று பேசுகிறார்களே, அந்த வரலாறுதான் என்ன?**

எந்தக் காங்கிரஸ் வரலாற்றைக் கேட்கிறீர்கள். H.O. ஹியம் என்ற வெள்ளைக்காரன் தோற்றுவித்த காங்கிரஸ் வரலாற்றையா? காந்தியார் ஆக்கிரமித்துக்கொண்ட காங்கிரஸ் வரலாற்றையா? காமராசர் தலைமைக்குட்பட்ட காங்கிரஸ் வரலாற்றையா? பாவம்—சுப்பிரமணியனாரிடம் சிக்கி இருக்கும் காங்கிரசின் வரலாற்றையா? எந்தக் காங்கிரசின் வரலாற்றைக் கேட்கிறீர்கள்?

**3. அமெரிக்க வானொலி நிலையங்கள், அந்த நாட்டு மத்திய அரசாங்கத்துக்குச் சொந்தம் என்கிறேன் நான். இல்லை என்கிறான் என் நண்பன். எது சரி?**

அமெரிக்க வானொலி நிலையங்களை அரசாங்கம்தான் அமைக்கின்றன. என்றாலும் அவற்றில் மத்திய அரசின் ஆதிக்கம் எதுவும் இருப்பதில்லை. நிகழ்ச்சிகளை வகுப்பதிலும் சரி, கொள்கைகளை வெளிப்படுத்துவதிலும் சரி, மத்திய அரசு தலையீடு எதுவும் கிடையாது. வானொலி மூலமும், டெலிவிஷன்கள் மூலமும், தங்கள் தங்கள் வாதப் பிரதிவாதங்களை தாராளமாக அரசியல் கட்சிகள் நடத்திக் கொள்ளலாம். அரசுத் தலையீட்டை அமெரிக்க மக்கள் விரும்புவதில்லை. இந்தியா மட்டுமே முழுக்க முழுக்க வானொலியைத்தான் ஆதிக்கத்தில் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

**4. நம் நாட்டுப் பள்ளிகளில் 'பெற்றோர்தினம்' கொண்டாடுகிறார்களே அதனால் பயன் ஏதாவது உண்டா?**

பயன் இருக்கவேண்டும் என்ற முறையில்தான் கல்விக் கொள்கையை வகுத்தளித்த ஆங்கிலேயர்கள் இம்முறையை இந்த நாட்டில் புகுத்தினார்கள். இப்போதைய நடைமுறைகளைப் பார்த்தால் பள்ளிகளும் இதனை முக்கியமாகக் கருதவில்லை, பெற்றோர்களும் இதன் முக்கியத்துவத்தை உணரவில்லை என்றுதான் தெரிகிறது. மாணவர்கள் பற்றிய கருத்தில், பெற்றோர்களும் ஆசிரியர்களும் அடிக்கடி கலந்து பேசி, கருத்துரையாடிக் கொண்டுவரும் பழக்கம் சில மேலை நாடுகளில் நீடித்துக்கொண்டு வருகிறது. நல்ல பயன்களும் அறுவடையாகின்றன இதேபோல் கல்லூரிகளும், தங்கள் மாணவர்களது பெற்றோருடன் நேரடி — நெருங்கிய தொடர்புகொண்டு நடைமுறைகளை உருவாக்கினால் ஒழிய இந்தியத் துணைக்கண்டத்தின் எதிர்கால மாணவர் உலகம், உருப்படியாகும் வழியேதும் இல்லை!

**5. நான் ஒரு 'கவிதை' அனுப்பி இருந்தேன்; பிரசுரிக்கவில்லையே ஏன்?**

எத்தனைப்பேர் கவிதைகளை விரும்பிப் படிக்கிறார்கள் என்று புரிந்துகொள்வதற்கு — தமிழக இதழ்களைப் புரட்டிப் பாருங்கள் தெரியும்! எனினும் அந்த உணர்வு அடியோடு மங்கிவிடக் கூடாதே என்பதற்காகத்தான் 'காஞ்சி' வாரம் தவறாமல் இரண்டொன்றை வெளியிட்டு வருகிறது. இப்போது கைவசம் இருக்கும் கவிதைகளே இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் போதுமே! என்ன செய்வது?

**6. அமெரிக்கக் கல்விக் கொள்கை, இந்தியாவைப் போன்றதுதானே!**

இல்லை. இங்குள்ள மாநிலத்துக்கு டெல்லி அரசு இப்படி இப்படித்தான் கல்விக்கொள்கை இருக்கவேண்டும் என்று அடிக்கடி சுட்டிக் காட்டிக்கொண்டும், வலியுறுத்திக்கொண்டும், சந்தர்ப்பங்களில் ஆணையிட்டும் வருகிறது. அமெரிக்கா, தன் மாநிலங்களுக்கு, அந்தந்தச் சூழ்நிலைகளையொட்டிய கொள்கையையும், முறைகளையும் வகுத்துக்கொள்ள முழு உரிமை அளித்திருக்கிறது—அரசியல் சட்டத் திருத்தம் ஒன்றின் மூலம்! என்று அமெரிக்க நூல் ஒன்று குறிப்பிடுகிறது. அமெரிக்கா ஜனநாயக நாடு; இந்தியா...?

**7. நாளைக்கொரு போராட்டம்; வேளைக்கொரு ஆர்ப்பாட்டம்! எங்கே நடக்கிறது? சொல்ல முடியுமா?**

நீங்கள் தமிழ் நாட்டிலிருந்து கொண்டுதான் கேட்கிறீர்கள் என்று தெரிகிறது. என்ன செய்வது? பாவம்! எந்த வேலையும் அற்றுப் போனவர்கள், அதைச் செய்தாவது பிழைப்பு நடத்தட்டுமே ஐயா!

**8. பாண்டிச்சேரி, தமிழ் நாட்டோடு இணையக்கூடாது என்று மறுப்பது எதனால்?**

அங்கும் 'முழு மதுவிலக்கு' வந்துவிடுமோ என்ற அச்சத்தால் இருக்குமோ!

★

# சிறுகதை மன்னன் ஓஹென்ரி!

நாற்பது வயதுக்குமேல் எழுத்துத் துறையில் ஈடுபட்டு இரண்டே வருடங்களில் நூற்றுக்குமேற் பட்ட சிறந்த சிறுகதைகளை எழுதிக் குவித்து, உலகம் போற்றும் சிறந்த சிறுகதை ஆசிரியர் ஐவரில் ஒருவராகத் திகழ்பவர்தான், அமெரிக்கா கண்டெடுத்த அற்புதமுத்து, 'ஓஹென்ரி.'

சிறுகதைகளை எழுதுவதற்காக ஹென்ரி, சிந்தனையைக் குழப்பிக்கொள்வதில்லை. 'மூடு' வரவில்லையே என்பதற்காக முழங்காலைக் கட்டிக் கொண்டிருப்பதில்லை; அமெரிக்காவின் இதயம் என்று புகழப்படுகின்ற நியூயார்க் நகரை ஒரு முறை வலம் வருவார். ஓடுவோர், பாடுவோர், உழைப்பவர், உண்பவர், உணவு விடுதியாளர், பிணிபோக்கும் மருத்துவர்கள், கல்வி புகட்டும் ஆசான்கள்—இப்படி பலதிறப்பட்ட மக்களைப் பார்த்துப் பழகி, அவர்களுடன் உரையாடுவார். அவர்களின் உரையாடல்கள், அதன் வாயிலாகப் பெறுகின்ற கருத்துக் களஞ்சியங்கள்தான் ஹென்ரியின் கதைகளுக்குக் கருவாக உருப் பெற்றவையாகும். அவர் சந்தித்த நல்ல, கெட்ட மனிதர்களே கதாநாயகன், வில்லன்களாக அவர் கதைகளில் நடமாடுவதுண்டு.

பணக்கார வர்க்கத்தைப் பற்றி சிறிதும் கவலைப்படாதவர் ஹென்ரி. இவர் கதைகளில், பெரிதும் இடம் பெற்றிருப்பது, ஏழை, எளிய, நடுத்தர மாந்தர்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைதான்! ஆனால் பார்ப்பதற்குச் சாதாரணமாகத் தோற்றமளிக்கின்ற அந்த அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் அவர் கற்பனைக் கண் கொண்டு நோக்கி கதைகளைச் சித்திரிக்கும் பாணியே அலாதி!

பிணத்தைப் பற்றி ஒரு எழுத்தாளர் வர்ணிப்பாரேயானால் நமக்கு அச்ச உணர்ச்சியோ, அல்லது சோக உணர்வோ ஏற்படலாம். ஆனால் ஹென்ரி நம்மை அந்த நிலைக்கு ஆளாக்குவதில்லை.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்று பொய்யாமொழிப் புலவன் வள்ளுவன், தெள்ளென விளக்கியதைப்போல, எத்தகைய சோக நிகழ்ச்சிகளையும் 'நகைச்சுவை' என்ற 'டானிக்' ஆக மாற்றிக் கொடுத்து அனைவரையும் சிரிப்புக் கடலில் ஆழ்த்திவிடுகின்ற திறமை பெற்றவர்ஹென்ரி.

புனைப் பெயர் இல்லாத எழுத்தாளனும் ஒரு எழுத்தாளனா? ஓஹென்ரியும் விதி விலக்கில்லை. வில்லியம் ஸிட்னி போர்ட்டர் என்றால் பலருக்கு 'இப்படி ஒரு எழுத்தாளரா? கேள்விப் பட்டதில்லையே! என்ற ஐயம்தான் தோன்றும். அவர்தான் 'ஓஹென்ரி' என்ற புனைப் பெயரில் உலகத்து வாசகர்களின் உள்ளங்களிலே வலம் வந்து கலை அழகு சொட்டச் சொட்டக் கதைபுனையும் தலை சிறந்த எழுத்தாளராவார்.

இவர், 1862—ஆம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள வடகரோலினா மாநிலத்தில் பிறந்தவர் நாற்பது வயதுக்கு முன்னர் இவருக்கும் எழுத்துத் துறைக்கும் ஒட்டு உறவு கூடக் கிடையாது. அப்படியிருக்க, நாம் பின்னால் ஒரு பிரசித்தி பெற்ற சிறுகதை வேந்தராகமாறப் போகிறோம் என்பதை அவர் எப்படி கற்பனை செய்து பார்த்திருக்க முடியும்? அதிலிருந்து எழுத்துத் துறைக்கும் வயதுக்கும் துளியும் சம்பந்தமில்லை என்ற உண்மை புலனாகிறது அல்லவா?

ஹென்ரி பட்ட கஷ்டங்களுக்குக் கணக்கே இல்லை.

படாத பாடு பட்டு, பண்ணையிலே உழன்று, 'பாங்கி'லே பணிபுரிந்து, மருந்துக் கடையிலே பணியாற்றி அலுத்துச் சலித்த பிறகே, இவர் எழுத்துத் துறையில் ஈடுபட்டார். இவர் பெற்ற அனுபவம் அனைத்தும் இவரது கதைகளுக்கு உயிரூட்டியது என்றால் மிகையில்லை.

இவர் எப்படி திடீரென்று இலக்கியத் துறையில் புகுந்தார் என்பதைப் படிக்கும்போது பரிதாபம் கலந்த ஆச்சரியமாக இருக்கும்.

வங்கி ஒன்றில் பணியாற்றிய ஹென்ரி மீது பணத்தைக் கையாடிவிட்டதாகக் குற்றம் சாட்டப் பட்டது. அதன் விளைவு? அவருக்கு மூன்றாண்டுகள் சிறைத்தண்டனை! ஆனால், ஹென்ரி, தானொரு நிரபராதி என்பதை வலியுறுத்தியும் இவர் பேச்சைக் கேட்கயாரும் முன் வரவில்லை. விடுதலையானவுடன் இவர் மேற்கொண்ட பணிதான் எழுத்துத் துறையாகும்.

பெண்களைப்பற்றி துணிச்சலாகக் கருத்துத் தெரிவித்தவர், ஹென்ரி, அவர் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

'பெண்கள் தனித்திருக்கையில் அவர்கள் எப்படி ஒய்வு நேரத்தைச் செலவிடுகிறார்கள் என்பதை ஆண்கள் அறிந்தால், அவர்கள் கண்டிப்பாகத் திருமணம் செய்து கொள்வதையேவிட்டு விடுவார்கள்.'

பாவம், ஹென்ரிக்கு இந்த விஷயத்தில் எத்தகைய அனுபவம் கிடைத்ததோ, தெரியவில்லை. ஆனால் இவர் திருமணம் செய்து கொண்டிருந்தாரா? என்பதற்கான சான்று கிடைக்கப் பெறவில்லை!

சிறுகதைத் துறையிலே, இவர் முழுக்க முழுக்க ஈடுபட்டு, அதிலேயே ஊறித் திளைத்து உயர்வைப் பெறவேண்டும் என்று எண்ணிச் செயல்பட்ட காரணத்தினால், கட்டுரைகள் கவிதைகள், நாவல்கள் பற்றிய சிந்தனையே இவர் சிந்தையில் உதிக்கவில்லை அவர் எண்ணியபடியே சிறுகதைத் துறையில் வெற்றியும் பெற்றார். இவரது சிறுகதைகள் அனைவரின் உள்ளத்தையும் தொடக் கூடியவை. ஒவ்வொரு கதையிலும், வீரம், தியாகம், போன்ற நீதிகள் அடங்கியிருக்கும் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடிகள்தான் இவரது சிறுகதைகள் என்பதை எவரும் ஒப்புக்கொள்ளமுடியும்.

சிலரைப்போல கதையைத் தேவையின்றி வளர்த்தாமல் முடிக்கின்றபோது இவர் கையாளும் உத்தி ஹென்ரிக்கே உரித்தானது. திடீரென்று திருப்பங்கள் கொடுத்து ஒரே வரியில் கதையை எதிர்பாராத கட்டத்தில் முடித்து மூளைக்கு வேலை கொடுப்பதில் இவர் வல்லவர். அதற்கு எடுத்துக்காட்டாக இவருடைய 'கடைசி இலை' என்ற கதையைக் கூறலாம்.

ஏறத்தாழ பத்துக்குமேற்பட்ட ஹென்ரியின் சிறுகதைத் தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளன. எனினும் அனைத்தும் அழியாப் புகழ் பெற்ற இலக்கியப் பேழைகளாகும்.

இவரது நினைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அமெரிக்க விஞ்ஞான—கலைக் கழகம் ஆண்டுதோறும் சிறந்த சிறுகதை ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பரிசளித்துப் பாராட்டுவது போற்றுதற்குரிய நற் பணியாகும்!

—இரா. சேதுராசன்

# வழி பிறக்குமா?

அன்புள்ள நண்பா!

1926-ம் ஆண்டு. இந்தியத் துணைக்கண்டம், வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கொடுங்கரங்களுக் கிடையே சிக்கிக் கொண்டிருந்த வேளை. எந்த உயர் பதவிகளையும் ஆங்கிலேய அதிகாரிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நாள். உயர்மட்டத்திலும், நடுத்தர நிலையிலும்கூட இருந்த பலரும், ஒரு பொது விழாவென்றால் வெள்ளை அதிகாரிகளை அழைத்து தலைமை ஏற்கச் செய்வதோ அல்லது வேறெந்த முறையிலாவது பங்கேற்கச் செய்வதோ ஒரு கவுரவம் என்று கருதிச் செயல்பட்ட சூழல் மலிந்துவிட்டிருந்த காலம்.

கந்தப்பனைப் புரிந்தவன் கண்ணப்பன் என்றால் கந்தப்பனும் கண்ணபபனும் அண்ணன் தம்பிகளாக இல்லாவிட்டாலும், இருவரும் ஒரு மண்ணில் பிறந்திருக்கிறார்கள், கண்ணப்பனுடைய நல்லது கெட்டதுகளில் கந்தப்பனோ. கந்தப்பனுடைய நல்லது கெட்டதுகளில் கண்ணப்பனோ பங்கு பற்றும் பாக்கியம் உடையவர்கள். அதனால் ஒருவரை ஒருவர்க்குப் புரிகிறது. அறிவுரைகள் வழங்கிக்கொள்ளுகின்றனர். ஏற்க முடிந்ததை ஒருவர்கொருவர் ஏற்று செயல்படக் கூடும். ஒரு தாய் மக்கள் நாமென்போம் என்ற சிறப்புக்கும் இடந் தேடிந்தர முடியும். அதனைவிட்டு கண்ணப்பன் சொல்வதா? நாம் கேட்பதா என்று கந்தப்பனோ அவன் சொல்லி நாம் கேட்பதா? என்று கண்ணப்பனோ நினைத்தால் அதில் பொதிந்திருக்கும் பொருள் எது? இத்தகையோர் வெளியார் யாரையாவது அழைத்து தம் பிரச்னைகளுக்குத் தீர்வு தேடுகிறார்கள் என்றால் அந்த இயல்பினை எப்படிப் பெரிட்டு அழைப்பது?

வெள்ளை அதிகாரிகளை அழைத்து விழா நடத்தி வந்த காலம், இத்தகையோரை மிகுதியாய்க் கொண்டிருந்த காலம்!

அப்படிப்பட்ட ஒரு நாள்தான் 1926-ல். சென்னையில் ஒரு கல்லூரியில் ஒருவர் பேச அழைக்கப்படுகிறார்.

வெள்ளையர்களது இயல்பைப் பற்றி முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தம் ஒரு நூலில் மயில் கழுத்து என்று அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். அதாவது மயில், தன் கழுத்தை அப்படியும் இப்படியும் திருப்பும்போது, திசைக்கு ஒருவித வண்ணத்தில் தோற்றம் தருமாம்!

இந்த அளவுக்கு விந்தை மனிதர்களாக வெள்ளையினத்தவர் இருந்தாலும், சிலபல வேளைகளில் இந்தியத் துணைக் கண்டத்துக்கு அவர்கள் செய்திருக்கின்ற பணி, மிகமிக சீரிய—செம்மையுடையதாக அமைந்தும் விட்டிருக்கிறது. அவர்கள் தந்திருக்கிற அறிவுரைகள்—கந்தப்பன், கண்ணப்பனுக்குத் தருவதினும், அல்லது கண்ணப்பன் கந்தப்பனுக்குத் தந்ததினும் தூய்மையுடையதாகவும் அமைந்துவிட்டிருப்பதனையும் அறிய முடியும். வெள்ளைக்காரர்களில் சிலர் அப்படி. சிலவேளைகளின் கந்தப்பனுடைய கருத்து கண்ணப்பனுக்கும் ஒத்துப்போவதேபோல் இன்னொருவர்.

எஸ். ஆர் தாஸ் என்பவர். வெள்ளையராட்சியில் வைஸ்ராயின் நிருவாகக் குழுவினரில் ஒருவராக இருந்தவர்.

சென்னைக்கு ஒரு கல்லூரிக்கு வருகை தந்தார். மாணவர்கள் குழுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பேசுவதற்கு எழுகிறார்!

என்ன ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறாய் நண்பா! பேசாதே! என்று தடுக்கப்பட்டாரா? தமிழில் பேசு!! என்று மறிக்கப்பட்டாரா? ஆங்கிலம் வேண்டாம்; இந்தியில் பேசுங்கள் என்று கூச்சலிடப்பட்டாரா? இல்லை. எதுவும் இல்லை. ஊசி விழுந்தால் அந்த ஒலி கூடக் கேட்கும் என்பார்கள் இல்லையா! அதுபோன்ற அமைதி! விரிவுரையாளர்களும், பேராசியர்களும் சூழ அமர்ந்திருக்கிறார்கள்!

1926 என்றால் சரியாக 42 ஆண்டுகளுக்கு முன்புதான்! சுதந்திரக் கிளர்ச்சியும், போராட்டங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளைதான்! காந்தியடிகள்கூட வடடார மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று தீவிரமாகக் கூறிக்கொண்டு வந்த நாள் அது. தாஸ் எழுகிறார்.

‘Politics is for those whose stomach is full’

என்று தம் கருத்தைத் தீவிரமாக எடுத்துக்காட்டுகிறார்!

சுதந்திரக் கிளர்ச்சி தீவிரமாக இருந்து கொண்டிருக்கிற வேளையில் யாராவது இப்படிச் சொல்லிவிட்டு உயிரோடு மீண்டுசெல்ல முடியுமா? தாஸ் சொன்னார்.

“Politics is for those whose stomach is full”

என்று! ஆமாம் நண்பா!

> "யாருடைய வயிறு நிரம்பி இருக்கிறதோ, அவர்களுக்காக அரசியல் இருக்கிறது"

நெஞ்சுயர்த்தி நின்றுதான் இதனைப்பேசினார்! மாணவர்களையும் பேராசிரியர்களையும் கூட்டிவைத்துக்கொண்டுதான், "வயிறு நிரம்பியவர்களுக்காகத்தான் அரசியல்" என்று ஆணித்தரமாகப் பேசினார்.

மாணவர்கள் கூச்சலிடவில்லை, பேராசிரியர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு முகத்தில் வினாக் குறியைத் தேக்கி வைத்துக்கொள்ளவில்லை. ஆசிரியர்களோடு மாணவர்களும் இணைந்து கைதட்டி அக்கருத்தை வரவேற்றிருக்கிறார்கள்! 1926ல்!!

1926ல் மாணவர்களுக்குத் தரப்பட்ட அறிவுரை இது. அதாவது மாணவர்களது கடமை கல்வி கற்பது மட்டுமே; கல்வி கற்பதற்காக மட்டுமே கல்லூரிக்கு வருகிறார்கள். கல்லூரிகளும், கலாசாலைகளும் கல்வியறிவைப் போதிப்பதற்காக மட்டுமே இயங்குகின்றன என்பதைத்தான்

> வயிறு நிரம்பி இருப்பவர்களுக்குத்தான் அரசியல்

என்ற சொல்லடுக்கால் விளக்கியிருக்கிறார்! அரசியல் போராட்டங்கள் மூலம் சுதந்திரம் கேட்டுக்கொண்டிருந்த வேளையில்தான் மாணவர்களைப் பார்த்து அப்படிச் சொன்னார்! சொல்லவேண்டியதை, சொல்ல வேண்டிய இடத்தில், சொல்லவேண்டியவர்களுக்குச் சொல்லிப்போனார்! அது 1926!! இன்று 1968!!

யாருடைய வயிறு நிரம்பி இருக்கிறதோ அவர்களுக்குத்தான் அரசியல் என்று சி. ஆர். தாஸ் சொன்னதைக்கேட்டு, கல்லூரி முதல்வர்கூட ஆத்திரப்படவில்லை. "உங்கள் தந்தைமார் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கவில்லையா? சுதந்திரப் போராட்டமென்பது அரசியல் வாழ்க்கை இல்லையா? வயிறு நிரம்ப வேண்டுமென்பதற்காக மட்டுமல்ல—மானத்தோடு—மரியாதையோடு — மதிப்போடு உலகின் முன் தலை நிமிர்ந்து நிற்கும் ஒரு மானப் போராட்டமல்லவா சுதந்திரப் போராட்டம்! இதனைப் பழித்துவிட்டாரே தாஸ்! மாணவர்களே! எழுங்கள்! போராட்டக் குரல் எழுப்புங்கள்!! தாஸ் ஒரு கருங்காலி! தாஸ் ஒரு முட்டாள்! தாஸ் ஒரு மடையன்! விடாதீர்கள்! தாசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுங்கள்! நம் சுதந்திரப் போராட்டத்தையும் பெற்றோரையும் இழித்துப் பழித்துவிட்ட அவரை விடாதீர்கள்! பழிவாங்கியே ஆகவேண்டும்! எழுங்கள் குழந்தைகளே! எழுங்கள்!! என்று கல்லூரி முதல்வர்கூட மாணவர்களைத் தூண்டவில்லை.

அவருக்குத் தெரிகிறது—மாணவர்கள் உலக அறிவைப் பெறுவதற்காகவே கல்லூரிக்கு வந்திருக்கிறார்கள்; விஞ்ஞானத்தைப் பற்றிய விளக்கம் பெற வந்திருக்கிறார்கள்! பௌதிகம் பற்றிய ஆராய்ச்சிக்கு அடிகோல வந்திருக்கிறார்கள். மொழியறிவைப் பெற வந்திருக்கிறார்கள்! உலகின் முன் சரி சமமாக நிற்கும் வாய்ப்பினைத்தேட வந்திருக்கிறார்கள்! நாட்டின் ஆட்சியை நடாத்திச் செல்லும் தெளிவினைப் பெற வந்திருக்கிறார்கள்!

மாணவர்களிடையே முதலமைச்சராவோர் இருக்கக்கூடும்; பிரதமராவோர் இருக்கக்கூடும். துணை அமைச்சராவோர் இருக்கக்கூடும், அது அதுபற்றி அறிந்துகொள்ளும் போக்கினைக் கிளர்ச்சி மூலம் உண்டாக்கிவரும் போக்கு தீயது—தீமை விளைவிக்கவல்லது என்பது அந்தக் கல்லூரி முதல்வருக்குத் தெரிகிறது. காந்தியடிகள்கூட மாணவர்கள் நேரடியாக அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதைக் கண்டித்தே வந்திருக்கிறார் என்பதையும் அவர் அறிவார்! கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் மாணவர்கள் கண்டிப்பாக ஈடுபாடு கொள்ளக்கூடாது என்றுகூட அவர் அறிவித்திருந்ததும் அவருக்குத் தெரிகிறது. அதனால் தாஸ் கூறியது கேட்டு அவருக்கும் ஆத்திரம் வரவில்லை. அதனால் ஆத்திரப்படும்படி பிறரையும் தூண்டவில்லை!

மாணவர்கள் அரசியல் பற்றி அறிந்துகொள்ளக் கூடாதா? அறிந்து கொள்வதனைத் தடுக்கத்தான் வேண்டுமா? இல்லை

> மாணவர்கள் அரசியல் பற்றி அறிந்து கொள்ளத்தான் வேண்டும் – தடுக்கப்படக் கூடாது.

> அறிந்து கொள்வது என்பது வேறு; ஈடுபடுவது என்பது வேறு.

தாஸ் கூறிய கருத்து, மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பதை விளக்குவதுதான். ஈடுபாடு கொள்வதென்றால், எந்த இலட்சியத்துக்காக மாணவர்கள் கல்லூரிக்கு வந்திருக்கிறார்களோ மாணவர் தம் பெற்றோர் எந்த நம்பிக்கையுடன் அவர்களைக் கலைக்கூடத்துக்கு அனுப்பி இருக்கிறார்களோ அது நிறைவேற முடியாத ஒரு நிலை தானாகவே ஏற்பட்டுவிடக்கூடும். அதனால்தான் தாஸ் அப்படிக் கூறினார். 1926-ல்!

1968-ன் நிலை என்ன?

கல்விக்கூடங்களில் மாணவர்களுக்கென மாணவர் அமைப்புக்கள் ஏற்படுத்திக் கொள்வதென்பது இன்று மட்டுமல்ல—பன்னெடுங் காலமாக உள்ள சிறந்த ஒரு பழக்கம்.

இந்தியாவில் மட்டுமல்ல – இங்கிலாந்தில்கூட இந்தப் பழக்கம் இருக்கிறது. இங்கிலாந்தில் மட்டுமல்ல —அமெரிக்காவில்கூட இருக்கிறது. அமெரிக்காவில் மட்டுமல்ல, அறிவுத் தெளிவு பெற்றுள்ள அனைத்து நாடுகளிலுமே, கல்வியகங்களில் மாணவர்களுக்கென, மாணவர் அமைப்பு ஒன்று மாணவர்களாலேயே ஏற்படுத்தப்பட்டு—அது இயங்கியும் வருகிறது.

அமெரிக்காவில் நண்பா, பள்ளி மாணவர்கள் தம் அமைப்புக்களை ஒரு அரசாங்கம்போலவே நடாத்துகிறார்கள். என் பள்ளிப் பருவத்தில்கூட, நான் பயின்ற கல்விக் கூடத்தில் மாணவர் அமைப்பு அப்படித்தான் இயங்கியதாக நினைவு, இந்த மாணவர் அரசாங்கம், அரசியல் கலப்பற்ற முறையில் நிர்மாணிக்கப்படுகிறது — நிர்வகிக்கப்படுகிறது அமெரிக்காவில்! இந்த மாணவர் அரசாங்கத்தின் நோக்கம், அவர்கள் அரசியலை அறிந்துகொள்ளச் செய்யவும், தாங்கள் ஒரு குடிமகனாக வாழத் தொடங்கும்போது நல்லதொரு குடிமகனாக நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையை சீருற, சிறப்புற செய்யும் பயிற்சியினைப் பெறுவதேயாகும்! அரசியல் ஈடுபாடு கட்டாயமாகத் தடுக்கப்படுகிறது!

இது இந்தியாவுக்குப் பொருந்துமா? இந்தியாவின் அரசியல் சட்டமே இங்கிலாந்து—அமெரிக்க நாட்டின்

கூட்டுச் சரக்குதானே! ஏன் பொருந்தாது? எத்தனை எத்தனை விஷயங்களில் நாம், இங்கிலாந்தை—அமெரிக்காவைப் பின்பற்றிக் கொண்டிருக்கவில்லை. நல்ல நடைமுறையொன்று எந்த நாட்டில் இருந்தால் என்ன? நல்லவை எங்கிருந்தாலும் ஏத்தித்தொழுவதால்—ஏற்றுப் பணிவதால் தீங்கென்ன?

கல்விக் கூடங்களின் இன்றைய நிலை—அரசியல் காழ்ப்புக்களுக்கு இடம் கொடுக்கப்பட்டு, மாணவர் அமைப்புக்கள்கூட அரசியல் அமைப்புக்களின் பேரால் இயங்கத் தொடங்கி இருப்பது ஆரோக்கியமானநிலை என்று யாராவது ஒப்புக்கொள்ள முடியுமா? வருங்காலத்தை நிர்ணயிக்கும் ஒரு தலைமுறையின் தொடக்கம் இப்படிக் கருக்கிவிடப்படுவதுதான் முறையா?

அரசியல் வாதிகள் மாணவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதனுல் ஏற்படுகின்ற தீயவிளைவுகளின் எதிரொலிகளே இந்த நிலைமை!

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பது ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்ருல், மாணவர்களோடு அரசியல் வாதிகள் தொடர்பு கொள்வதனைக்கண்டிப்பாகத் தடுத்துத் தீரவேண்டுமில்லையா?

தமிழகத்தைப் பொறுத்து மட்டும் காண்போம்! மாணவர்களுக்குள்ளே காங்கிரஸ் அமைப்பென்றும், கழக அமைப்பென்றும், கம்யூனிஸ்டு அமைப்பென்றும், தனித்தனியாக அரசியலின் பேரால் இயங்குகின்ற நிலைமை அனுமதிக்கப்படுவதின் மூலம் என்ன விளைந்திருக்கிறது?

கல்விக்கூடங்களுக்கு அவர்கள் எதற்காக வந்திருக்கிருர்களோ அதில் முழுக் கவனம் செலுத்த இயலாதவாறு தடுக்கப்படுவதுடன், ஒரு அமைப்பு மாணவர்கள், பிற அமைப்பு மாணவர்கள்பால் ஆத்திரவுணர்வைக் கொட்டவும், காழ்ப்புக்களுக்கு இடம் தந்து அறிவு வளர்ச்சிக்குத் தடையேற்படுத்திக் கொள்ளவுமான நிலைதான் ஏற்படும்.

தமிழகக் கல்விக்கூடங்கள், சி. ஆர். தாஸ் சொன்னதுபோல், மாணவர்களுக்கு மட்டுமே இயங்கக்கூடிய விதத்தில் நிர்வகிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசியல் இயக்கங்களின் பேரால் மாணவர்கள் அமைப்புக்கள் ஏற்படுத்திக்கொள்வது தடுக்கப்பட்டாக வேண்டும்! அரசியல் தலைவர்கள் எந்த வடிவத்திலும் மாணவர்களோடு தொடர்பு கொள்வதை நிறுத்திக் கொள்ளும்படியான நிலையைத் தோற்றுவித்தாக வேண்டும்.

மாணவர் விவகாரங்கள் எதுவும் கல்விக் கூடங்களோடு முடிவு பெறுவனவாக இருக்க உரியவர்கள் பொறுப்பேற்றுத் தீரவேண்டும்!

இல்லையாயின், தமிழக மாணவர்கள், வருங்காலத்தில் தம் கடமையை நிறைவேற்றத் தக்கவர்களாக உருவாக்கப்படுவது என்பது முயல் கொம்பாகவேதான் ஆகிவிடக்கூடும்.

பெற்ருேர்கள் மட்டுமே இதில் தொடர்புகொண்டு பிரச்னைக்கு வழிகாணும் நிலைமை ஏற்படுத்தியாக வேண்டும்.

மாணவர்—ஆசிரியர் தொடர்பு நெருக்கம்போல், ஆசிரியர் — பெற்ருேர் நெருக்கமான தொடர்புக்கு அமைப்புக்கள் ஏற்படுத்திக்கொண்டு நியாய உணர்வோடு செயல்பட்டாலன்றி—எதிர்காலம் விரும்பத்தக்கதாக இருக்கும் என்று நம்புவதற்கில்லை.

அரசியல் கட்சிகள் அனைத்தும் கூடி விவாதித்து—மாணவர்களைத் தம் பிடிகளிலிருந்து விடுவிக்க முன்வரும் நாளே, தமிழகத்திற்குப் பொன்னுளாகும்! கந்தப்பனுக்கு, கண்ணப்பனும், கண்ணப்பனுக்கு கந்தப்பனும் மட்டுமே உதவி என்ற நிலை—இந்த ஒரு விஷயத்தில் சிறந்த ஒரு வழி காட்டியாக இருக்கும் என்பதும் சிந்திக்கூடியதல்லவா நண்பா!

அன்புள்ள,

திருவாரூர்-முத்துராமன்.

# இன்பப் பெருவாழ்வு

கருத்தடை இன்றே செய்துக்கொள்;
கவலை அணுகா தொத்துக்கொள்!
திருமண மாகிக் குழந்தைகளாய்த்
திரிவதே வாழ்வில் சரியாமோ?

பறவை காகம், குஞ்சுகளும்,
பாடி ஆடல் பார்த்ததுண்டே?
திறமுடன் அவைபோல் ஒன்றிரண்டாய்
திரிந்தால் தானே வாழ்ந்திடலாம்!

ஆழ உழுதே பயிரிட்டு
அறுவடை செய்தால் இலாபமுண்டு!
ஏழு எட்டாய்ப் பெற்றெடுத்தே
ஏழ்மையில் உழல்வதில் இலாபமுண்டோ?

உடலில் வலிமை குன்றுவதும்
உளத்தில் உறுதி கன்றுவதும்;
கடலின் நீராய் கண்ணீரைக்
கால மெல்லாம் கொட்டுவதும்

வருவாய் குறைவாய்த் தோன்றுவதும்
வந்தே செலவுகள் கூடுவதும்
திருவே இன்றி நோய்நொடியில்
தினமும் உழன்றே சாவதுவும்

அதிகக் குழந்தை பெறுவதனுல்
அடையும் பலன்கள் எண்ணிடுவீர்!
புதிதாய் வழங்கும் சாதனங்கள்
போக்கிடும் இந்தக் குறைகளெல்லாம்!

மாத்திரை தின்ருல் ஒருபத்து
மாதத்தில் தோன்று வதைப்போக்கும்;
ஆத்திர மின்றி வளையங்களை,
ஆண்டால் வருடம் பலவாகும்.

வீர மக்கள் ஒன்றிரண்டை
விரும்பிப் பெற்று, குழந்தைகளே
தீர கருத்தடை செய்திடுவீர்
திளைப்பீர் இன்பப் பெருவாழ்வில்!

—பழனியூரான்—

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

# சித்தர் நவலோக கல்பம்

தங்கம், வெள்ளி, தாமிரம், மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.



டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளையின்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

—[REGD]—

**307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடு**

**திருவல்லிக்கேணி, சென்னை-5**

தொலைபேசி எண்: 84786

கிளை வைத்தியசாலை:

...ற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம், (டயாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம்,
யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும்,
டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே
பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும்
நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ... இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.